2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

ஆ. ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளாதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு அறிவிப்பு. இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக இருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்த திருவாளர்கள் உமநாத், ரகுமான்கான் ஆகியவர்கள் இருக்கையில் இல்லாததால், அது இன்றைக்கு இல்லை. அடுத்து கவன ஈர்ப்புகள்.

4 கவன ஈர்ப்புகள்.

அ. வேலூர் நகராட்சியில் கழிவுநீர் குடிநீருடன் கலத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் என். ஏ. பூங்காவனம், தி. கா. நல்லப்பர் ஆகியோர் ஒரே பொருள் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் அதை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

*திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "வேலூர் நகராட்சியின் வடக்குப் பகுதியில் குடி தண்ணீரோடு கழிவு நீர் கலந்து விடுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

வட ஆற்காடு மாவட்டம், வேலூர் நகராட்சியில் வட பகுதியில் உள்ள மக்களுக்கு வினியோகிக்கப்படும் குடிநீர் சத்துவாச்சாரி-தமிழ்நாடு குடிநீர் வடிகால் திட்டத்தின் கீழ்த் தரப்படுகிறது. பாலாற்றிலிருந்து எடுக்கப்படும் தண்ணீரில் பெரும்பகுதி, வேலூர் நகராட்சியின் உயர்நிலை நீர்த்தேக்கத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து நகருக்கு பகிர்மானக் குழாய்கள் மூலமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2. தலைமைப் பணியிடத்தில் நீர் சுத்திகரிக்கப்படுகிறது (Chloririsation) நகரின் பல பகுதிகளுக்கும் செலுத்தப்படும் தண்ணீரில் தேவையான குளோரின் (2பி.பி.எம்.) அளவு நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. இடையில் கழிவுநீர் கலக்க ஏதுவில்லை. இன்றுவரை பொதுமக்களிடமிருந்து இது தொடர்பான எவ்வித முறையீடும் இல்லை.